முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் ரோமரிஷி அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

29.10.2018, திங்கட்கிழமை

1. **மண்ணுலகை ஆள வந்த அரங்கா**
**மக்களை காக்க வந்த அரசா**
**எண்ணமெல்லாம் தரும சக்தியாக்கி**
**ஏழாம் படை வீடு கண்ட தேசிகா**
2. தேசிகா உன் சக்தி கண்டவர்
தேறுவர் உலகினில் உயருவரெனக் கூறி
ஆசிபட ஒளி சூட்சும நூலை
அகிலமதில் **விளம்பி துலை திங்கள்**
3. **திங்களிலே வியதிகதி சோமவாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 12ம் நாள் 29.10.2018, திங்கட்கிழமை)**
**தேசிகனுக்கு ரோமரிஷி யானும்**
ஓங்கார ஞான உலகம் அமைய உரைப்பேன்
ஓங்கார ஞானியாக அருளி வரும்
4. வருகின்ற ஆறுமுக அரங்கனை
வையகத்தார் குருவாக ஏற்று
தருமபலம் பெருக்கிக் கொண்டே
தவறாது உயர் ஞான வழியை
5. வழியைத் தொடரும் மக்களுக்கு
வாழ்வில் நன்மைகள் கூடும்
பழிபாவம் வஞ்சம் தீவினை நேரா
பாதுகாப்பான வாழ்வு வளம் காணும்
6. காணவே நல் இல்லறம் அமைவதுடன்
கண்ணியமிக்க புத்திர வரங்களும்
ஞானமுள்ள நட்புகளும் அமைந்து
ஞானியரின் அருள்பலம் பெற்றவர்க்கு
7. பெற்றவர்க்கு பேரானந்த கதியோடு
பிறவா பெரும் பேறும் கிட்டும்
ஏற்றுமே எண்ணம் யாவும்
எவரொருவர் அரங்க ஞானி நாமசெபம்
8. செபம் தொடர்ந்து செய்கின்றாரோ
செயல்பாடாக மாதரும பலத்தை
அபயமென ஏற்று செய்கின்றாரோ
அவருள் அரங்கமகான் கலந்து
9. கலந்துமே கனவிலும் காண முடியா
காட்சி வளர்ச்சி பேர் புகழ்
வளமான பொருளாதார பலம்
வல்லமையான பதவி யோகமும் தந்து

10. தந்துமே அற்புதம் நிகழ்த்திடுவார்
தன்னார்வ தொண்டு பெருக்கவே
செந்தில் வேலனார் ஞானியாக
சேவைக்குள் இறங்கி வழிநடத்த

11. வழிகள் தனை தொடருபவரும்
வழி தெரியா திகைப்பவரும்
வழி மொழிந்து பிரணவக்குடில் வர
வாழும் காலமே சர்வபலமும் அடைவர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் ரோமரிஷி அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

புவியை ஆள வந்துதித்த ஆறுமுக அரங்கமகா தேசிகனே கலியுக மக்களை மாயையின் துன்பத்திலிருந்து மீட்டு காத்து ஞானவழி அருளி கடைத்தேற்றிடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்திட்ட அரங்கமகா தேசிகா ஞானஅரசே உமது எண்ணமெல்லாம் தயைசிந்தையாகி தருமசக்தியாக ஆக்கி உலகைக் காக்க உலகப்பெருமாற்றம் உருவாக்கிட சர்வ வல்லமையுடன் ஏழாம் படை வீடாய் துறையூர் ஓங்காரக்குடிலினை படைத்திட்ட அரங்கமகா தேசிகனே உமது சக்தியை உண்மையாக கண்டவரெல்லாம் கடைத்தேறிடுவார்கள். உலகினில் உயர்ந்த நிலையை அடைந்திடுவார்கள் எனக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 12ம் நாள் 29.10.2018, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே ரோமரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் ரோமரிஷி.

முருகப்பெருமானின் சக்தி வடிவமாக ஓங்கார ஞானியாக உலகினர்க்கு அருள் செய்து வருகின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை உலக மக்களெல்லாம் குலகுருவாக ஏற்றுக் கொண்டு அவரவரின் தருமபலத்தினை தர்மங்கள் செய்து உயர்த்திக் கொண்டு தவறாமல் அரங்கன் ஆளுகின்ற உயர் ஞான வழிமுறைகளை ஏற்று வாழ்வினில் தொடர்ந்து கடைப்பிடிக்கின்றவர்களுக்கு வாழ்வினில் நன்மைகள் பெருகிடும், பழிபாவம் நேராது வஞ்சத்தினாலோ தீயவினைகளினாலோ பாதிக்கப்படாமல் பாதுகாப்பான வாழ்வும் வளமான வாழ்வும் அமையும்.

அவர்களது இல்லற வாழ்வு நல்இல்லற வாழ்வாக அமைவதுடன் கண்ணியம்மிக்க பண்புள்ள புத்திரபாக்கியம் உண்டாகிடும், ஞானவான்களின் நட்பும் உண்டாகிடும்.

ஞானியர்களின் அருள்பலம் பெற்றவர்களுக்கு பேரானந்த நிலையும் பிறவாப் பெரும்பேறும் கிடைத்திடும். எண்ணமெல்லாம் அரங்கமகானை தியானித்து எவரொருவர் அரங்கமகான் நாமங்களை மனம் உருகி பயபக்தியுடன் சொல்லி வருகின்றார்களோ, நாமங்களை சொல்வதுடன் மாதருமங்களை செய்து மாதரும பலத்தை பெறுகின்றார்களோ, தர்மத்தை அபயம் என ஏற்று செய்கின்றார்களோ அவர்களுள் ஆறுமுக அரங்கமகா தேசிகனும் உட்கலந்து கனவிலும் காண முடியாத அற்புதங்களை அற்புத காட்சிகளையும் அற்புதமான உணர்ச்சிகளையும் காண்பார்கள், பேரும் புகழையும் அடைவார்கள், வளம்மிக்க பொருளாதார பலத்தினை பெறுவார்கள். உண்மையான பதவியோகம் பெற்று அவரெல்லாம் உலகினில் அற்புதங்களை நிகழ்த்திடுவார்கள்.

அவரவரும் தொண்டுகளை தன்னார்வமாய் செய்திட, முருகப்பெருமானும் ஞானியாக இப்புவியில் இறங்கி சேவைகளை தலைமை ஏற்று வழிநடத்துவார். அரங்கன் உருவில் ஆறுமுகனே வழிநடத்திட அரங்கன் கூறும் வழியில் நடப்பவர்களும், வழிவகை தெரியாமல் திகைத்து தவிப்பவர்களும் ஓங்காரக்குடிலிற்கு வருகை தந்து அரங்கதரிசனம் பெற்றிட அவரவரும் வாழும் காலத்திலேயே சர்வபலத்தினை அடைந்து சிறப்படைவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் ரோமரிஷி.

–சுபம்–